இணைப்பு—I.

]22-ம் பக்கத்தில் வெள்ளிக்குறியிட்ட 485-ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

அருந்ததியர்களுக்கு வழங்கப்படும் தனிச்சலுகைகளும் அதற்கான நிதி ஒதுக்கீடும் அடங்கிய அறிக்கை.

காலணிகள் தைப்பதற்கும், தோலினால் இதர பொருட்கள் தயாரிக்கவும் அருந்ததியர்களுக்கு ரூ. 500 வட்டியில்லாக்கடன் வழங்கப்படுகின்றது.

2. தோல் தையல் இயந்திரமும் தரப்படுகிறது.

3. அருந்ததியர்களுக்கென்று ஒரு தனி தோல் பதனிடும் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தொழில் வர்த்தகத்துறை மூலம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இந்தக்கூட்டுறவு சங்கத்திற்கு 1961 முதல் இதுவரை அரசு 2,34,073 ரூபாய் பல்வேறு காரணங்களுக்கான நிதி உதவி அளித்திருக்கின்றது. இந்தத்தொகையில் இன்னும் ரூ. 84,078 திருப்பி செலுத்த வேண்டியிருக்கிறது. தவிர சேமநிதி மானியமாக ரூ. 5,500-ம், வாடகை மானியமாக ரூ. 3,000-ம் அளிக்கப்பட்டிருக்கின்றது. பங்கு மூலதனமாக ரூ. 10,000 வரை மாநில அரசு உதவிக் தொகையாக அளித்திருக்கின்றது.

4. ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி, ஆகியவைகளில் நகரசுத்தி தொழில் செய்து வரும் அருந்ததியர்களுக்கு ரூபாய் 1,500 முதல் 2,500 வரை செலவில் வீடுகட்டி கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் தொகையில் 60 சதவிகிதம் அரசு மான்யமாக வழங்குகின்றது. இதற்காக 1971–72-ம் நிதியாண்டில் 9 லட்சம் ரூபாய் அரசு ஒதுக்கியுள்ளது. 1972–73-ம் நிதியாண்டில் 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்து நகரசுத்தி தொழிலில் ஈடுபட்டிருக்கும் அருந்ததியர்களின் முன்னேற்றத்திற்காக ஊராட்சிகளுக்கோ, நகராட்சிகளுக்கோ அல்லது மாநகராட்சிகளுக்கோ, நகரசுத்தி தொழிலாளர்களுக்கு கையுறை வாங்கி வழங்குவதற்காகவும், காலணிகள் வழங்குவதற்கும் மலத்தை அப்புறப்படுத்துவதற்குத் தேவையான சட்டி (Pan) தள்ளுவண்டி (Wheel Barrows) இதுபோன்ற பொருட்கள் வாங்குவதற்கு அரசு மான்யம் வழங்கி வருகின்றது. இதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு ரூ. 1 இலட்சமும், ஊர்வளர்ச்சி இயக்குநருக்கு ரூ. 50,000-மும் 1971–72 நிதியாண்டில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 1972–73 நிதியாண்டில் ரூபாய் 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.